# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்

# அசல் வழக்கு எண்.19/2014

2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29-ம் நாள் புதன் கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1 குணசேகரன் என்பவரது குறுக்கு விசாரணை, திருமதி.ஆர்.யமுனாதேவி, பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை 1வது பிரதிவாதி தரப்பில்**

எனக்கு 51 வயது. அய்யர்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமாகவில்லை. சின்னசாமி என்கிற முத்துவெங்கடாசல ரெட்டியாருக்கு 4 மகன்கள். வா.சா.ஆ.2ன் படி புல எண் 541/2, 529/2 ஆகியவை சதாசிவ ரெட்டியார் மற்றும் சிலர் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 2 புல எண்கள் மட்டுமே வா.சா.ஆ.2ன் படி பட்டாவாக இருந்தது என்றால் சரி. புல எண் 540/3, 540/8 ஆகியவை தரிசு என்று வா.சா.ஆ.2 ல் குறிப்பிடபட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த 2 எண்களும் அரசு நிலங்கள் என்றாலும் அதற்கும் சதாசிவ ரெட்டியாருக்கும் சம்பந்தமில்லை என்றாலும் சதாசிவ ரெட்டியார் பெயரில் பின்னிட்டு பட்டா வழங்கபட்டது. அவ்வாறு சதாசிவ ரெட்டியார் பெயரில் பட்டா வழங்கபட்டதற்கு ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதனால் சதாசிவ ரெட்டியாருக்கு பட்டா வழங்கபட்டது என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. சதாசிவ ரெட்டியார் எப்போது இறந்தார் என்பது எனக்கு தெரியாது. சதாசிவ ரெட்டியாருக்கு பிறகு புல எண் 541/2, 529/2 ஆகியவை யாருக்கு சென்றது என்றால் அவரது 4 மகன்களுக்கு அதை பிரித்து கொடுத்தார். சூடாமணி அம்மாள் என்பவர் முத்துவெங்கடாசல ரெட்டியாரின் மனைவி ஆவார். அவர் என்னுடைய பாட்டி. 31.1.1935ல் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் புல எண்கள் 529/2, 540/3 கண்ட சொத்துக்களையும் 20.9.1937ல் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் புல எண்கள் 541/2, 540/4, கண்ட சொத்துக்களையும் முத்துவெங்கடாசல ரெட்டியார் சூடாமணி அம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது.

முத்துவெங்கடாசல ரெட்டியார் வேறு இடத்தில் வாங்கி இருந்த கடனை அடைப்பதற்காக அந்த சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. அதனால் அந்த சொத்துக்கள் சூடாமணி அம்மாளின் தனிபட்ட சொத்துக்கள் என்றால் எனக்கு தெரியாது. சூடாமணி அம்மாளுக்கு திருமணமான பிறகு அவருடைய சீதன பணத்தை வைத்து அந்த சொத்துக்களை அவர் கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு அதைபற்றி எனக்கு தெரியாது. சூடாமணி அம்மாள் கிரையம் பெற்ற 2 கிரைய பத்திரங்களை 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் வாதியிடம் காட்டி கேட்டபோது அதைபற்றி எனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டார். சூடாமணி அம்மாள் கிரையம் பெற்ற சொத்துக்களை தன்னுடைய மகன்களான சின்னராஜிக்கும் ராமலிங்க ராஜிக்கும் அவர் பிரித்து கொடுத்தார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. ஆனால் என் பாட்டி அந்த சொத்துக்களை பிரிக்கவில்லை என்று ஒன்றாக அனுபவித்து அதை வைத்து சாப்பிட்டு வந்தோம் என்று என்னிடம் சொல்லியுள்ளார். அவ்வாறு ஒரு பாக பத்திரம் எழுதபட்டது என்றாலும் அதில் குடியிருக்கும் வீட்டில் சூடாமணி அம்மாள் ஆயுள் காலம் வரை குடியிருந்து கொள்ள வேண்டும் அவருடைய 2 மகன்களும் அவருக்கு ஜீவனாம்சம் தர வேண்டும் என்று எழுதபட்டது என்றால் எனக்கு அதைபற்றி தெரியாது. மேலும் சூடாமணி அம்மாள் இறந்தபிறகு அந்த வீட்டை 2 மகன்களும் பிரித்து கொள்ள வேண்டும் என்று பத்திரத்தில் எழுதபட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3ன் படி விற்கபட்ட சொத்து சூடாமணி அம்மாள் கிரையம் பெற்ற சொத்து என்றால் எனக்கு தெரியாது. ராமலிங்க ராஜூவிற்கும் அவ்வாறு விற்ற கிரைய தொகையை சூடாமணி அம்மாள் ஒரு பகுதி தொகையை கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3ன் மூலம் சொத்தை விற்று பெற்ற கிரைய பணம் சூடாமணி அம்மாளின் சொந்த பணம் என்றால் எனக்கு தெரியாது. அவருடைய மகன்கள் என்பதால் இருவருக்கும் ஒரு தொகையை சூடாமணி அம்மாள் தன் விருப்பத்தின் பேரில் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5,6 ல் கண்டுள்ள சொத்துக்கள் சூடாமணி அம்மாளின் சொந்த சொத்து என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ. 5,6 ல் கண்ட சொத்தை விற்று வந்த பணத்தை சூடாமணி அம்மாளே எடுத்து கொண்டார் என்றால் தவறு. அந்த பணத்தை வைத்து காடு வாங்கியதாக சூடாமணி அம்மாள் என்னிடம்

சொல்லியுள்ளார். அந்த வீட்டை வா.சா.ஆ. 5,6 ன் படி கிரையம் செய்யும் வரை சூடாமணி அம்மாள் அந்த வீட்டில் தான் குடியிருந்தார் என்றால் சரி. அந்த கிரைய பணத்தை சூடாமணி அம்மாள் தன்னுடைய ஜீவனாம்சத்திற்காக தானே வைத்து கொண்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4ல் கண்டுள்ள வழக்கு ஏ பட்டியல் சொத்துக்களை சின்னராஜ் தன்னுடைய சொந்த பணத்தை கொண்டும் கடன் வாங்கி கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. என் பாட்டி வேறு சொத்தை வாங்குவதற்காக அந்த சொத்தை விற்றதாக என்னிடம் சொல்லியது. நான் சொல்வதுபோல சொத்து வாங்குவதற்காக அந்த சொத்து விற்கபடவில்லை என்றாலும் சொத்து விற்ற பணம் கடனை அடைக்க பயன்படுத்தபட்டது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.7 முதல் 13 வரையிலான ஆவணங்கள் எங்கள் ஊரில் ஒரு தனிபட்ட நபர் அனுபவத்தில் இருந்த சொத்தை என் அப்பாவும் மற்றும் ஊரில் பல பேரும் வழக்கு போட்டு மீட்டு அந்த சொத்து கிராமத்தில் மக்கள் குடியிருப்பில் பயன்பாட்டில் உள்ளது என்பதை காட்ட தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அந்த பொது இடத்தில் சின்னராஜிக்கு 1ம் பிரதிவாதி ஒரு இடம் ஒதுக்கபட்டது என்றால் சரியல்ல. அந்த இடம் எனக்கு தான் ஒதுக்கபட்டது. அவ்வாறு நான் சொல்வது தவறு என்றாலும் சின்னராஜிக்கு தான் இடம் ஒதுக்கபட்டு அதில் அவர் வீடு கட்டி குடியுள்ளார் என்றாலும் தவறு. அந்த இடம் என் பெயரில் கொடுக்கபட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏனென்றால் அந்த இடம் புறம்போக்கு இடமாகும். யாருக்கும் பட்டா இல்லை. 13.12.1999 ல் 4வது பிரதிவாதி சிவகுமார் குவைத் நாட்டிற்கு டிரைவர் வேலைக்கு சென்றார் என்றால் எனக்கு தேதி சரியாக தெரியாது. என்ன வேலைக்கு சென்றார் என்பது எனக்கு தெரியாது. 1999 அல்லது 2000ம் ஆண்டில் அவர் வெளிநாட்டில் வேலைக்கு சென்றார். சிவகுமாருக்கு 2004ல் திருமணம் நடந்ததா என்றால் 2004 அல்லது 2005ல் திருமணம் நடந்தது. சிவகுமாரின் மனைவி திருமணமான 20 நாளில் தன் கணவருடன் வெளிநாடு சென்று நர்ஸ் வேலை செய்தார் என்றால் சரியல்ல. 2 வருடங்கள் கழித்து சிவகுமார் மனைவி வெளிநாட்டிற்கு போனார். அவர்கள் இருவரும் வெளிநாட்டில் உழைத்து பணம் சம்பாதித்து அவர்களுடைய கணக்கில் வைத்துள்ளார்கள் என்றாலும் அது அவர்களுடைய பணம் என்றாலும் சரி. வழக்கு ஏ பட்டியல் சொத்தில் குறிப்பிட்டுள்ள 7 மற்றும் 8வது இன

சொத்துக்கள் முறையே 2001 மற்றும் 2004ம் ஆண்டு சிவகுமார் வெளிநாட்டில் சம்பாதித்து அனுப்பிய பணத்தை வைத்து அவருக்காக சின்னராஜ் பெயரில் வாங்கபட்டது என்று சொன்னால் தவறு. அந்த சொத்துக்களை விவசாய நிலங்களில் வந்த வருமானத்தை வைத்தும் நான் நவதானியம் வியாபாரம் செய்த வகையில் கிடைத்த பணத்தை வைத்தும் சின்னராஜ் பெரியவர் என்பதால் அவர் பெயரில் கிரையம் வாங்கபட்டது. அவ்வாறு நான் சொல்வது தவறு என்றாலும் எனக்கு எந்த தொழிலும் வருமானமும் இல்லை என்று சொன்னால் தவறு. வா.சா.ஆ.15ன் படி ஏ பட்டியல் 8வது இன சொத்தின் மதிப்பு ரூ.44,000/- பத்திரத்தில் கிரைய தொகையாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் அது சரியல்ல. அந்த சொத்தின் மதிப்பு அப்போது ரூபாய் ஒரு இலட்சம் ஆகும். 7.7.2004ல் அந்த சொத்து கிரையம் செய்யபட்டது என்றால் சரி. அந்த சொத்து கிரையம் பெறபட்டபோது சிவகுமார் வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரி. சிவகுமார் அவருடைய என்.ஆர்.இ அக்கவுண்ட் எண் 14177 பேங்க் ஆப் இந்தியா அரும்பாவூர் கிளை கணக்கில் இருந்து காசோலை எண் 340 யை ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு இந்த சொத்தை வாங்குவதற்காக சின்னராஜ் பெயரில் கொடுத்தார் என்றாலும் அந்த பணத்தை வைத்து அந்த சொத்து கிரையம் பெறபட்டது என்றாலும் சரியல்ல. அவர் காசோலை கொடுத்து இருக்கலாம் ஆனால் அதை வைத்து கிரையம் வாங்கபட்டது என்று சொல்வது தவறு. வா.சா.ஆ.14ல் குறிப்பிட்டுள்ள 7வது இன சொத்தும் சிவகுமார் அனுப்பிய பணத்தை வைத்து சின்னராஜ் பெயரில் கிரையம் செய்யபட்டது என்றால் தவறு. வா.சா.ஆ.16 ல் கண்ட சொத்து அசோக் நகரில் உள்ள மனை பி பட்டியலில் முதல் இன சொத்து சிவகுமார் அனுப்பிய பணத்தை கொண்டு சின்னராஜ் பெயரில் கிரையம் வாங்கபட்டது என்றால் தவறு. அந்த சொத்து விவசாய வருமானத்தையும் நான் நவதானிய வியாபாரம் செய்து ஈட்டிய பணத்தையும் வைத்து நான் ரூபாய் பத்தாயிரமும் சிவகுமார் ரூபாய் பத்தாயிரமும் கொடுத்து மூத்தவர் என்பதால் சின்னராஜ் பெயரில் கிரையம் வாங்கபட்டது. அந்த சொத்தை கிரையம் வாங்க சிவகுமார் அவருடைய என்.ஆர்.இ அக்கவுண்ட் எண் 14177 பேங்க் ஆப் இந்தியா அரும்பாவூர் கிளை கணக்கில் இருந்து காசோலை எண்கள் 34547, 34548 யை தேதி 12.4.2007ல் 2 காசோலைகளையும் தலா ரூபாய் ஒரு இலட்சத்திற்கு இந்த சொத்தை

வாங்குவதற்காக சின்னராஜ் பெயரில் கொடுத்தார் என்றாலும் அந்த பணத்தை வைத்து அந்த சொத்து கிரையம் பெறபட்டது என்றாலும் சரியல்ல. அந்த சொத்தின் மதிப்பு ரூ.1,35,000/- க்கு கிரையம் வாங்கபட்டது என்றால் சரியல்ல. அந்த சொத்து ரூ.4,50,000/- க்கு கிரையம் பெறபட்டது. 2007ம் ஆண்டு வரை எனக்கு திருமணமாகவில்லை என்றால் சரி. எனக்கு எந்த சொத்தும் இல்லை என்பதால் திருமணமாகவில்லை என்றால் தவறு. என் அப்பா எனக்கு விவசாயத்தை சொல்லி கொடுத்து படிப்பை சொல்லி கொடுக்க தவறிவிட்டார். நான் படிக்கவில்லை என்பதால் எனக்கு படித்த பெண்கள் எங்கள் ஜாதியில் திருமணம் செய்து கொள்ள தர மறுப்பதாக என் அப்பா சொல்லி வந்தார். வேறு ஜாதியில் வேண்டுமானால் திருமணம் செய்து கொள் என்று சொன்னார். நான் அதற்கு மறுத்து திருமணம் செய்து கொள்ளவில்லை. எனக்கு எந்த சொத்தும் இல்லை என்பதாலும் திருமணமாக வேண்டும் என்பதால் வழக்கு பி பட்டியல் சொத்தில் 1வது இன சொத்தில் ஒரு பகுதியை வா.சா.ஆ.17ன் மூலம் என் அப்பா எனக்கு தான பத்திரமாக கொடுத்தார் என்றால் சரி. அப்போது அந்த பத்திரத்தை பற்றி எனக்கு தெரியாது. அதை பற்றி பின்னிட்டு தெரிய வந்தது. என்னிடம் பட்டா மாற்றுவதாக சொல்லி 2 தாள்களில் என் அப்பா கையெழுத்து வாங்கி கொண்டு அந்த தான பத்திரத்தை ரத்து செய்துவிட்டார். வா.சா.ஆ.16ன் படி கிரையம் பெறபட்ட பத்திரத்தில் சொத்து விவரம் தவறாக எழுதபட்டது என்றால் எனக்கு தெரியாது. அதே தவறான சொத்து விவரத்தை வைத்து எனக்கு தான பத்திரம் எழுதி தரபட்டது என்றால் தான பத்திரம் எழுதி தரபட்டது. அந்த சொத்து விவரம் தவறானதா என்று எனக்கு தெரியாது. அதனால் வா.சா.ஆ.16,17ல் கண்டுள்ளபடி சொத்து எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அந்த கேள்வி கேட்பதற்கு வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை செய்கிறார். அதனால் வா.சா.ஆ.17 தானபத்திரம் ரத்து செய்யபட்டது என்றால் தவறு. அதனால் வா.சா.ஆ.17 தானபத்திரத்தின்படி பி பட்டியல் சொத்தில் முதல் இன சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பி பட்டியல் சொத்தில் 1வது இன சொத்து அசோக் நகர் பிளாட்டை பின்னிட்டு 1ம் பிரதிவாதி பெயரில் சொத்து விவரத்தில் ஏற்பட்ட தவறை திருத்தி மீண்டும் கிரையம் பத்திரம் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு திருத்தி எழுதபட்ட பத்திரத்தில் கண்ட சொத்தும் சின்னராஜ் பெயரில் சிவகுமாருக்காக

எழுதி வாங்கபட்டது என்றாலும் அந்த சொத்து சிவகுமாரின் தனிபட்ட சொத்து என்றாலும் தவறு. 29.8.2007ல் வா.சா.ஆ.18ல் என் பெயரிலும் சிவகுமார் பெயரிலும் கிரையம் பெறபட்ட மனைகளுக்கான கிரைய தொகை முழுவதையும் சிவகுமாரும் அவருடைய மனைவியும் கொடுத்தார்கள் என்றாலும் எனக்கு திருமணமாகவில்லை என்பதால் எனக்கு ஒரு ஆதரவு செய்ய வேண்டும் என்று எனக்கும் ஒரு சொத்து எழுதி வைத்தார்கள் என்றால் சரியல்ல. அந்த சொத்தை கிரையம் வாங்க சிவகுமார் மனைவி 5ம் பிரதிவாதி நித்யா அவருடைய என்.ஆர்.இ அக்கவுண்ட் எண் 16121 பேங்க் ஆப் இந்தியா அரும்பாவூர் கிளை கணக்கில் இருந்து காசோலை எண்கள் 39802,39803 யை தேதி 12.7.2007ல் 2 காசோலைகளையும் தலா ரூபாய் ஒரு இலட்சத்திற்கும், காசோலை எண் 39804 யை 16.8.2007 தேதியிட்டு ரூ.75,000/-க்கு என் பெயரில் காசோலையை கொடுத்து இந்த சொத்தை வாங்குவதற்காக என் பெயரில் கொடுத்தார் என்றாலும் அந்த பணத்தை வைத்து அந்த சொத்தை நானும் சிவகுமாரும் கிரையம் பெற்றோம் என்றாலும் சரியல்ல. அவர் காசோலை கொடுத்தார். ஆனால் சொத்தை வாங்குவதற்கு தரவில்லை. நித்யாவின் அம்மாவிற்கு அந்த பணத்தை தரும்படி தான் காசோலையை கொடுத்தார். வழக்கு பி அட்டவணை சொத்தில் 3வது இன சொத்துக்குரிய கிரைய பத்திரமான வா.சா.ஆ.19, 29.8.2007 அன்று பதிவு செய்யபட்டது என்றால் சரி. அதற்காக நித்யா அவருடைய என்.ஆர்.இ அக்கவுண்டில் இருந்து ரூ.86,000/- பணத்தை எடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த பத்திரத்திற்காக சிவகுமார் 27.8.2007 அன்று அவருடைய பேங்க் ஆப் இந்தியா அரும்பாவூர் கிளையில் இருந்து சேமிப்பு கணக்கு எண் 13577ல் இருந்து ரூ.86,000/- யை எடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 27.8.2007 ல் சிவகுமார் எனக்கு காசோலை மூலம் ரூ.50,000/- கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.19ன் படி நித்யா அவருடைய சுய பணத்தை கொண்டு அந்த சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. அதில் கண்ட சொத்து நித்யாவின் தனிபட்ட சொத்து என்றால் சரியல்ல. வா.சா.ஆ.20,21ல் பி அட்டவணை 4வது இன சொத்து மனைகள் சிவகுமாரின் சொந்த வருமானத்தை கொண்டு கிரையம் பெறபட்டது என்றால் தவறு. அதற்காக நான் ரூபாய் ஐந்து இலட்சம் பணம் கொடுத்தேன். அந்த மனைகளின்

மதிப்பு அன்றையதேதியில் தலா ரூ.1,70,000/- என்றால் சரியல்ல. அப்போது சிவகுமார் இங்கு தான் இருந்தார். அந்த பிளாட்டுகள் 4.6.2010 அன்று கிரையம் பெறபட்டது என்றால் சரி. அந்த பத்திரங்களுக்காக சிவகுமார் 3.6.2010 அன்று அவருடைய பேங்க் ஆப் இந்தியா அரும்பாவூர் கிளையில் இருந்து சேமிப்பு கணக்கு எண் 13577ல் இருந்து ரூ.3,00,000/- யை எடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த கிரைய பத்திரங்களை பெறுவதற்காகவும் செலவுகளுக்காகவும் நித்யா அவருடைய என்.ஆர்.இ அக்கவுண்ட் 15621 பேங்க் ஆப் இந்தியா அரும்பாவூர் கிளையில் இருந்து காசோலை எண் 9652 மூலம் ரூ.3,00,000/- சிவகுமாருக்கு கொடுத்து சிவகுமார் அந்த காசோலையை காசாக்கி அந்த சொத்துக்களை கிரையம் பெற்றார் என்றால் அவ்வாறு காசோலை தரவில்லை. மேற்படி தொகைகளை வைத்து தான் அந்த சொத்துக்கள் கிரையம் பெறபட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.22ன் படி நான் சிவகுமாரின் பவர் முகவர் என்ற அடிப்படையில் சிவகுமார் மற்றும் அவருடைய மனைவியின் பணத்தை கொண்டு அப்பத்திரத்தில் கண்ட சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. அந்த பிளாட்டை கிரையம் பேசியபோது நித்யா இந்தியாவில் இருந்தார் என்றால் சரி. என் வீட்டின் பெரியவர் முன்பாக நித்யா இருந்தபோது கிரைய தொகை பேசி முடிக்கபட்டது. கிரைய முன்தொகை நித்யாவின் பணம் அல்ல. எங்களுடைய பணம். அப்போது ஒரு மாத காலத்திற்குள் பத்திரம் எழுத வேண்டும் என்று பேசபட்டது. சொத்தை விற்றவர் வீடு கட்டி சாவி கொடுத்தார் ஆனால் காலிமனையாக எழுதி கொள்ளுங்கள் என்று சொன்னார். பத்திர பதிவின் போது நித்யா ஊரில் இல்லை வெளிநாடு சென்றுவிட்டார். பாக்கி கிரைய தொகையை எங்கள் அப்பாவிற்கும் எங்களுக்கும் சொந்தமான 150 பவுன் நகையில் 80 பவுனும் அரும்பாவூர் பாங்க் ஆப் இந்தியா கிளையில் வைத்து நகை கடன் பெற்றும் என் உறவினர் அமுதா என்பவரிடம் பணம் பெற்றும் பாக்கி தொகை தரபட்டது. அதன்பிறகு கிரைய பத்திரம் பதிவு செய்யபட்டது. நான் சொல்வது முழுவதும் பொய் என்றாலும் அந்த சொத்தை வாங்க நான் ஒரு பைசா கூட தரவில்லை என்றாலும் சரியல்ல. நித்யா அந்த கிரைய பத்திரத்தை செய்து கொள்வதற்காக முன்பணம் மற்றும் கிரைய தொகைக்காகவும் பத்திர செலவுக்காகவும் 10.8.11ல் அவருடைய சேமிப்பு கணக்கு எண் 15627ல் இருந்து பேங்க் ஆப் இந்தியா அரும்பாவூர்

கிளையில் இருந்து ரூ.2,30,000/- யை கணக்கில் இருந்து எடுத்தார் என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் நகையை அடமானம் வைத்தும் உறவினர்களிடம் பணத்தை வாங்கியும் அந்த கிரைய பத்திரம் பெறபடவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் கூட்டு குடும்பம் என்பதே இல்லை என்றாலும் கூட்டு குடும்ப சொத்துக்கள் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல.